பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : புரட்டாசி 15 (1—10—68) செவ்வாய் ★ வெளியூர் : புரட்டாசி 16 (2—10—68) புதன் [இதழ் : 88

அண்ணல் காந்திக்கு அஞ்சலி

அண்ணல் காந்தியடிகளின் நூற்றுண்டு விழாத் தொடக்க நாளில், 'நம் நாடு' இதழ் சார்பில், எமது 'அஞ்சலி'யைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

சென்னை மாநகராட்சித் தேர்தல்---கழக வேட்பாளர் பட்டியல்

சென்னை, அக். 1---

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மன்றக் குழு இன்று காலை 10-மணிக்கு தலைவர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கழகப் பொருளாளர் கருணாநிதி, தலைமை நிலையச் செயலாளர் கே. ஏ. மதியழகன், அமைப்புச் செயலாளர் என். வி நடராசன், கொள்கை பரப்புச் செயலாளர் சத்தியவாணிமுத்து, வெளியீட்டுச் செயலாளர் சி பி. சிற்றரசு, தொழிற்சங்கச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி, ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்களான அன்பில் தர்மலிங்கம், மதுரை எஸ். முத்து சென்னை மாவட்ட தி மு க. செயலாளர் நீலநாராயணன், மாநகராட்சிமன்ற தி. மு. க தலைவர் வி முனுசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆய்வுக் குழுக்கள் அளித்த விவரங்களை ஆராய்ந்தும், விவாதித்தும், இறுதியாக ஆட்சிமன்றக் குழு கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்தது :—

வண்ணைத் தொகுதி

வட்ட எண் — பெயர்

1. தண்டையார்பேட்டை — மு. வேதாசலம் எம்.எல்.ஏ.
3. கிரேஸ் கார்டன் — பி. ஏ. என். இராசரத்தினம்
4. சஞ்சீவிராயன்பேட்டை — கே. எம். கண்ணபிரான்
5. மொட்டைத் தோட்டம் — கே. ஆறுமுகம்
8. இராயபுரம் — இரா. மு. மனோகரன்
9. மீனாட்சியம்மன்பேட்டை — வி. எஸ். ஆனந்தன்
10. பழைய வண்ணாரப்பேட்டை — டி. வெங்கடேசன் எம்.சி.

துறைமுகத் தொகுதி

11. ஏழுகிணறு (வடக்கு) — இலட்சுமிபதி எம்.சி.
12. அம்மன்கோயில் (வடக்கு) — வி. முனுசாமி எம்.சி.
13. முத்தியாலுப் பேட்டை — அ. செல்வராசன் எம்.சி.
15. மண்ணடி — கிருஷ்ணமூர்த்தி
16. அம்மன்கோயில் (தெற்கு) — கே. கோவிந்தசாமி எம்.சி.
17. ஏழுகிணறு (தெற்கு) — கோ. செங்குட்டுவன்
19. கொத்தவால்சாவடி — ந. செயராமன்

பேசின்பிரிட்ஜ் தொகுதி

21. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் — எல். பாலசுந்தரம்
24. கொருக்குப்பேட்டை — மோகன்ராஜ்
25. குமாரசாமி நகர் — ஆர். ஆறுமுகம் எம்.சி.
27. பேசின்பிரிட்ஜ் — கி. எத்திராசன்
28. கொண்டித்தோப்பு — என். வி. என். சோமு
29. பெத்துநாயக்கன் பேட்டை — சி. எஸ். கணேசன்
30. பெருமாள்கோவில் தோட்டம் — அரு. சக்கரபாணி

பூங்கா நகர்த் தொகுதி

32. பெருமாள்பேட்டை — சுந்தரதாசன்
33. கண்ணப்பர் நகர் — எம். கன்னியப்பன் எம்.சி.
34. அன்பழகன் நகர் — அக்கீம்
35. சூளை — டி. கிருஷ்ணமூர்த்தி எம்.சி.
36. பெரியமேடு — சுப்பிரமணி
37. யானைகவுனி — வி. சானகிராமன்
38. நேதாஜி நகர் — ப. ஆசைமுத்து
39. எடப்பாளையம் — டபிள்யூ. பி. பி சுந்தரம்
40. பூங்கா நகர் — பொ. கு. இராமதாசு

பெரம்பூர்த் தொகுதி

41. வியாசர்பாடி — இராகுவேலு
42. இளங்கோ நகர் — தனசேகரன்
43. பெரம்பூர் — வி. தணிகாசலம் எம்.சி.
44. திரு. வி. க. நகர் — லோகநாதன் எம்.சி.
45. வாடியா நகர் — நடராசன் எம்.சி.
46. டாக்டர் சத்தியவாணி முத்து நகர் — மா. கண்ணப்பன்
48. டாக்டர் பெசண்ட் நகர் — தி. சு. நல்லதம்பி எம்.சி.
49. பட்டாளம் — சு. பாலன் எம்.சி.

புரசைத் தொகுதி

53. சிறுவள்ளூர் — பி. எஸ். சீவரத்தினம்
55. நாகம்மையார் நகர் — வேலூர் நாராயணன் எம்.சி.
56. அயனாவரம் — ஆ. சண்முகம்
57. பன்னீர்செல்வம் நகர் — ப. கு. மலையப்பன்
58. மறைமலை அடிகள் நகர் — மைனர் மோசஸ் எம்.சி.
59. அஞ்சுகம் அம்மையார் நகர் — ந. சு. மணி
60. புரசைவாக்கம் — டி. டி. இராமானுசம்

எழும்பூர்த் தொகுதி

61. அண்ணா நகர் — தட்சணாமூர்த்தி
62. ஷெனாய் நகர் — என். எஸ். தேவராசன்
63. நுங்கம்பாக்கம் — எம். எஸ். இராமச்சந்திரன்
64. கீழ்ப்பாக்கம் — மோகனசுந்தரம்
65. சேத்துப்பட்டு — முருகேசன்
66. கங்காதீசுவரர் கோயில் — ந. கணபதி பி.எஸ்சி.பி.எல்.
67. டாக்டர் அம்பேத்கார் நகர் — கன்னியப்பன் எம்.சி.
68. எழும்பூர் — பாஸ்கரன் எம்.சி.
70. கோமளீசுவரன்பேட்டை — சாகுல் அமீது

ஆயிரம்விளக்குத் தொகுதி

71. ஆயிரம் விளக்கு — பி. கே. கேசவன்
72. அழகிரி நகர் — ஜேசுதாஸ்
73. பாலசுப்பிரமணியம் நகர் — சிட்டிபாபு எம்.பி.
76. பாரதி நகர் — க. பார்த்தசாரதி
77. ஆஜாத் நகர் — எ. கி. புகழேந்தி
78. இராயப்பேட்டை — த. சதானந்தம்
79. பாரதிதாசன் நகர் — மு. அரங்கநாதன் எம்.சி.
80. கிருஷ்ணாம்பேட்டை — டி. குப்புசாமி

திருவல்லிக்கேணித் தொகுதி

81. ஆதிகேசவபுரம் — ப. க. வேணுகோபால்
82. சிந்தாதிரிப்பேட்டை — சி. வி. ஆடலழகன்
83. நரசிங்கபுரம் — குப்பம்மாள்
85. திருவட்டீசுவரன் பேட்டை — எஸ். எம். கிருஷ்ணன் எம்.சி.
86. சேப்பாக்கம் — சி. ஆதிகேசவன்
87. டாக்டர் நடேசன் நகர் — மு. வரதராசன்
88. ஜாம் பஜார் — தாமோதரன்
90. மெரினா — இராசு

மயிலாப்பூர்த் தொகுதி

91. விவேகானந்தாபுரம் — எஸ். வி. வேலு
92. மாதவபெருமாள்புரம் — துளசிங்கம் எம்.சி.
93. காரனேசுவபுரம் — கே. கோவிந்தசாமி எம்.சி.
94. சாந்தோம் — இரா. காசிச்சாமி
96. திருவள்ளுவர் நகர் — த. சாரங்கன்
97. பீமண்ணன்பேட்டை — செல்வராசன் எம்.சி.
98. இராஜா அண்ணாமலைபுரம் — சு. அரி
99. அவ்வை நகர் — டி. கே. கபாலி எம்.சி.
100. அடையாறு — அ. த. சங்கரன்

தியாகராய நகர் தொகுதி

101. கோ. சு. மணி நகர் — இரா. சம்பந்தம் எம்.சி.
102. கலைவாணர் நகர் — முத்துராமலிங்கம்
103. நக்கீரர் நகர் — வை. பாலசுந்தரம்
107. கலைஞர் கருணாநிதி நகர் — பவளவண்ணன் எம்.சி.
109. சத்தியமூர்த்தி நகர் — இரா. சடகோபன் எம்.சி.
110. ஆழ்வார் பேட்டை — லோகநாதன்

சைதாப்பேட்டை தொகுதி

111. அமைந்தகரை — செ. மோகனப்பா
112. பெரியார் நகர் — சி. வி. சிட்டிபாபு
113. வடபழனி — சோ. கி. மூர்த்தி
115. எம்.ஜி.ஆர். நகர் — கோ அய்யாவு
117. குமரன் நகர் — எஸ் வி. இரத்தினம்
118. சைதாப்பேட்டை — சைதை சம்பந்தம் எம்.சி.
119. ஜி. டி. நாயுடு நகர் — ஆர். எம். சீதரன்
120. கிண்டி — ஆர். டி. பாஸ்கரன் எம்.சி.

தோழமைக் கட்சிகளுடன் உடன்பாடு கொண்டுள்ள வட்டங்கள் வருமாறு :—

முஸ்லிம் லீக்

14. வள்ளல் சீதக்காதி நகர்
26. டாக்டர் விசயராகவலு நகர்
47. புளியந்தோப்பு
65. சேத்துப்பட்டு
74. அமீர் மகால்
75. உமறுப்புலவர் நகர்
84. நேரு நகர்

இடது கம்யூனிஸ்டு

22. ஜீவா நகர்
51. செம்பியம்

வலது கம்யூனிஸ்டு

2. ம. பொ. சி. நகர்
23. செரியன் நகர்

தமிழரசுக் கழகம்

50. தட்டாங்குளம்
89. திருவல்லிக்கேணி

திராவிடர் கழகம்

54. 'விடுதலை' குருசாமி நகர்
104. தேனாம்பேட்டை

உழைப்பாளர் கட்சி

7. சிங்காரத் தோட்டம்
108. வ. உ. சி. நகர்

கழக வேட்பாளர்களின் இரண்டாவது பட்டியலும், தோழமைக் கட்சியான சுதந்தரக் கட்சியோடு உடன்பாடு கொள்ளும் வட்டங்கள் விவரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

---இரா. நெடுஞ்செழியன்,
தலைவர்,
தி.மு.க. ஆட்சி மன்றக் குழு.

அறநெறி உணர்வு!

குடியரசுத் தலைவர்
டாக்டர்
ஜாகிர் உசேன்

ஒரு மனிதன் மற்றவர்களுக்குத் தொண்டு செய்யும் பொருட்டு மேற்கொள்ளும் குறிப்பிட்ட நடவடிக்கைகளைக் காலமும், சூழ்நிலையும் பக்குவப்படுத்துவது இயற்கையே!

மேற்கொள்ளப்படும் முறைகளைத் தனித்தனியாக எடுத்துக்கொள்ளக்கூடாது; எந்தச் சூழ்நிலையில் அவை மேற்சொள்ளப்படுகின்றனவோ அதிலிருந்து தனியாகப் பிரிக்கக்கூடாது.

உதாரணமாக, உள்ளத்தின் தூய்மையைப் பொறுத்துத்தான் நோக்கத்தின் தூய்மை அமைந்திருக்கும் என்றும், ஒரு நோக்கத்தை அடைய முடியவில்லை என்றால் அதற்குக் காரணம், தமக்கு வேண்டிய அளவு தூய்மை இருக்கவில்லை என்பதுதான் என்றும் காந்தியார் கொண்டிருந்த நம்பிக்கையின் ஒரு அம்சம்தான் அவரது உண்ணுநோன்பு!

தங்கள்மீது மேலும் முழுமையான கட்டுப்பாடு கொள்ள விரும்பும் தனி நபர்களுக்கு மட்டும்தான் அந்த முறையை அவர் சிபாரிசு செய்வார்; நோக்கத்தை அடைவதற்கான வழிமுறையாக அதை அவர் தமக்கே ஒதுக்கியிருந்தார்; ஏனென்றால், தவறான வழிகளில் அதைப் பயன்படுத்தக்கூடிய அபாயம் இருந்தது.

இன்று காந்தியின் நினைவை வாழச் செய்ய விரும்புவோர், அவர் உண்ணுநோன்பு இருந்த சந்தர்ப்பங்களையோ, அதற்கான காரணங்களையோ அதிக அளவில் நினைவுகூர்வதைவிட, அதிகாரத்தை நியாயமான முறையில் பயன்படுத்தும் அளவுக்கும், அதை எந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டுமோ அவற்றுக்காக மட்டும் பயன்படுத்தும் அளவுக்கும் தூய்மை இல்லாதவர்களுக்கு அதிகாரம் மாசு கற்பிற்கும் என்ற உண்மையை நினைவுகூர்வது சாலச் சிறந்ததாகும்.

அதிகார ஆசை கொண்டவர்கள், எத்தகைய நோக்கத்தின் தூய்மைக்குக் காந்தியார் உயர்ந்ததோர் உதாரணமாக இருந்தாரோ, அத்தகைய தூய்மையைப் பெற முயல வேண்டும். அவர்களை அதிகாரத்திற்குக் கொண்டுவர முயலுபவர்கள், இத்தகைய தூய்மையைக் கோர வேண்டும்.

காந்தியார் உண்மையோடு அறிவுறுத்தி -- கடமைப் பற்றோடு பின்பற்றிய அகிம்சையை உதட்டளவில் நாம் பாராட்டுகிறோம்; அது நடக்காத காரியம்போலத் தோன்றும் அளவுக்குக் கேள்விகளைக் கேட்கிறோம்.

கொலை செய்யும் வலிமை வாய்ந்த ஆயுதங்களுடன் நமக்கு எதிராகப் போராடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் ஒரு எதிரிக்கு எதிராக இது பயன் அளிக்காது என்று ஒப்புக்கொண்டாலும்கூட, நமக்குள் உள்ள உறவு முறைகளிலாவது இதைப் பயன்படுத்த முடியாதா என்ன? நலன் செய்யும் ஆசை -- பெருந்தன்மை -- வீரம் -- அறநெறி ஆற்றல் ஆகியவற்றின் வெளிப்படையான அம்சம்தான் அகிம்சை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அறநெறிச் சட்டத்தின் உயர்வு ஏற்றுக்கொள்ளப்படும்வரையில், எல்லா இடங்களிலும் -- எல்லாச் சமயங்களிலும், இந்த அரும் பெரும் குணங்களை வளர்க்க வேண்டும்.

சமயம், மொழி, பண்பாடு ஆகியவற்றின் மாறுபட்ட அம்சங்களைப் பெருந்தன்மையுடன் எந்த அளவுக்குச் சகித்துக்கொள்கிறோமோ அந்த அளவுக்கு அமைதியும், ஒத்துழைப்பும் இருக்கும் என்ற நிலை உள்ள நமது நாட்டைப் போன்ற ஒரு நாட்டில் வாழ்க்கையின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கு மட்டுமன்றி, உயிர் வாழ்வதற்கே இந்த நற்குணங்களை வளர்ப்பது அவசியமாகும்.

அறநெறிச் சட்டத்தின் உயர்வில் காந்தியார் நம்பிக்கை கொண்டிருந்தார். இந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி அதை மேலும் பரப்புவதற்காகத்தான், சத்தியாக்கிரக முறையைக் கையாண்டார். தென்னாப்பிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையும், இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் ஆட்சியும் அவரது சத்தியாக்கிரகத்துக்கு வரலாற்று வடிவம் கொடுத்தன!

பல்வேறு சூழ்நிலைகளில் அதை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை நாம் புரிந்துகொள்ள விரும்பினால், அதன் குறிப்பிட்ட அரசியல் உருவங்களுக்கு அப்பால் நாம் நோக்க வேண்டும்.

'இடைவிடாது அறநெறி உணர்வைத் தீவிரமாக்கினால்தான் உண்மையையும், நீதியையும் நிலைநிறுத்த முடியும்' என்பதுதான் அடிப்படைத் தத்துவம். அதிகாரத்தைப் பயன்படுத்தி அறநெறியை உணர்ந்துகொள்ள முடியாது.

தங்களையே பயன்படுத்தக்கூடிய ஒரு அறநெறிச் சட்டத்துக்கு ஏற்பத் தங்களைச் சுதந்தர மனிதர்களாகக் கருதிக்கொள்ளும் வகையில் தனி நபர்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலம்தான் அறநெறி உணர்வை ஏற்படுத்த முடியும். இது எளிதாகத் தோன்றுகிறது; ஆரம்பப் பாடமாகக்கூடத் தோன்றுகிறது; ஆனால், இதன் செயல் விளைவுகளைச் சிந்தித்துப் பார்க்கும்போது, இதன் அளவைக் கண்டு வியக்கிறோம். மற்றவர்களில் அறநெறி நிபந்தனை உணர்வைத் தட்டி எழுப்ப விரும்பும் அறநெறித் துறையில் உள்ள சுதந்தரக் காவலர், தமது நோக்கங்களை அடைவதில் பலத்தையோ, அதிகாரத்தையோ பயன்படுத்தும் விருப்பத்தை ஒழிக்க வேண்டும். தம்முள் பொறுமை இழக்க வேண்டும்; இருப்பினும், மற்றவர்களுடன் பழகும்போது எல்லையற்ற பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும்.

உண்மை அறநெறி உணர்வை உருவாக்குவதற்கு மிகப் பொருத்தமான வழிமுறையை -- அது எங்கிருந்தாலும் -- அதை வலுப்படுத்துவதற்கும், அது தன்னைத்தானே வெளிக்காட்டிக்கொள்ள வாய்ப்பு அளிக்கும் வகையில் அதைப் பயனுள்ள முறையில் சுய உணர்வுடன் செயலாற்றும் நோக்கத்துடனும் மிகப் பொருத்தமான வழிமுறையை எப்போதும் ஆராயவேண்டும்.

'சித்தாந்தத்திற்கு ஏற்பத்தான் நடைமுறை இருக்கவேண்டும்' என்று நாம் எல்லோரும் ஒப்புக்கொள்வோம் -- சிரமமின்றி ஒப்புக்கொள்வோம்; ஆனால், தங்கள் வாழ்க்கை முழுவதையும், நடை

(இதன் தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

வழிகாட்டும் ஒளிவிளக்கு

[துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி]

காலத்தின் தூசி படிந்து -- வறண்டு -- தரிசு நிலமாக இருந்த ஒரு நிலத்தில் புத்துயிர் ஊட்டும் புதுநீரை காந்தியார் கொண்டுவந்தார்! பல நூற்றாண்டு உறக்கத்திலிருந்து அவர் இந்தியாவைத் தட்டி எழுப்பினார்! மக்கள் வாழ்விலிருந்து வாழத் துவங்கிய அவர், அதிலிருந்து பிரிக்க முடியாமல் ஒன்றிவிட்டார்! மிகத் தாழ்ந்தவர்களது சிந்தனை முறையை அவர் அறிந்திருந்த விதம் -- மக்கள் கூட்டத்தின் ஒன்றுபட்ட முயற்சியைத் திரட்டும் வல்லமை -- நோக்கத்தில் ஈடுபாடுகொண்ட கடமைப்பற்று -- ஒருபோதும் கலையாத அவரது மனப் பக்குவம் ஆகியவை எவரையும் கவர்ந்துவிடும்!

கடந்த காலத்தின் விளைவுகளால் அழுத்தப்பட்ட திரள்திரளான மக்களின் நீண்ட போராட்டத்திற்கு வழிகாட்டி, அதை உருவாக்குவதற்காக நாகரீக மனிதனின் வரலாற்றில் இதைவிட அதிகமாய் எவரும் சாதனை புரிந்ததில்லை என்றே சொல்லவேண்டும். வேறு எவரையும்விட அதிக உண்மையானவிதத்தில் அவர் இந்தியாவின் பிரதிநிதியாக இருந்தார். வேறு எவரையும்விட அதிகமான தீர்க்கதரிசனம் -- தெளிவான பார்வை அவருக்கு இருந்தது! நம் நாட்டின் ஆத்மாவினுடைய திருவுருவமாக அவர் திகழ்ந்தார். இந்திய வரலாற்றில் இப்படி எவரும் இருந்ததில்லை!

அறத்தின் அடிப்படைகளை அவர் நமக்கு நினைவூட்டுகிறார்! பகைமையைவிட அன்பும், போரைவிட அமைதியும், 'பூசலைவிட ஒத்துழைப்பும், பலத்தைவிட நயமான மாறுதலும் சிறந்தது' என்று அவர் நமக்கு அறிவூட்டினார்!

வரலாற்றின் பல பாதைகள் சேருமிடத்தில், மனித குலத்தின் வருங்காலம் எங்கு செல்வது என்று முடிவு செய்யவேண்டிய நெருக்கடியான சமயத்தில், நமது அன்புக்குரிய காந்தியார் பிறந்த நாள் நூற்றாண்டு விழா வந்திருக்கிறது.

நிரந்தர அமைதி, உலக சகோதர உணர்வு எனும் சிகரத்தை மனிதகுலம் சென்று அடைவதற்கான மலைப் பாதைக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக -- தன்னலமற்ற சேவை, பொது வாழ்வின் நேர்மையான போக்கு எனும் காந்தியார் ஏற்றிவைத்த சுடர் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது!

மாக்ஸ் முல்லர் ஒரு தடவை கூறியதைப் போல், இந்தியாவில் மாபெரும் கடந்த காலத்துக்கும் -- ஒரு மாபெரும் வருங்காலத்துக்கும் இடையே ஒருவர் சிக்கிக் கொண்டிருந்தால், நம் காலத்தில் அந்த இடைவெளியை நிரப்பும் தகுதி காந்தியார் ஒருவருக்குத்தான் உண்டு.

நமது வாழ்வுக்கு அரை நூற்றாண்டுக்குமேல் அவர் ஊக்கம் அளித்தார்! நம் நாட்டின் வருங்காலத்துக்கு தொடர்ந்து வழிகாட்டி வருவார்!

காந்தியார் வகுத்துத் தந்த அடிப்படை நெறிகள் ஒரு நாள் உலக மக்கள் அனைவரையும் நடத்திச் செல்லும் என்று கருதும் அளவுக்கு நான் நன்னம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

1914 ஜூலை மாதத்தில்தான் முதல் தடவையாக நான் அவரை ஆங்கிலேய மண்ணில் சந்தித்தேன். (அப்போது அவர் 'ஸ்ரீ காந்தி'யாகத்தான் இருந்தார்; 'மகாத்மா'வாக இருக்கவில்லை); அப்போது அவரது ஒரு சீடரானேன் என்ற முறையில், காந்தியின் அரும் பெரும் குணங்களையும், மகத்தான சாதனைகளையும் நினைவுகூாவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள நான் இரு மடங்கு பெருமைப்படுகிறேன்.

காந்தியார் அறிவுரைகளின் சாரத்தை மீண்டும் நினைவுபடுத்திககொள்ள வேண்டிய தேவை நம் நாட்டின் வரலாற்றில், முன் எப்போதையும்விட இப்போது அதிகமாக இருக்கிறது.

நம் நாட்டில் கல்விக்கூடங்களில் உள்ள இளைஞர்களும், வாழ்க்கையின் மற்ற துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் அவரது அறிவுரைகளின் உட்பொருளைப் புரிந்துகொண்டு, நாட்டின் முன்னேற்றத்தில் ஒரு செயலான பங்கு வகிக்க வேண்டிய காலம் -- தங்கள் வாழ்க்கைக்கு பொருளையும் நோக்கத்தையும் தேடிக் கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டது என்றே கருதுகிறேன்.

"உலகில் பாபம் குவியும்போது -- நாடுகள் ஒன்றுக்கொன்று அநியாயமாக நடந்துகொள்ளும் வன்முறையும் இரத்த வெறியும் தாண்டவமாடும்போது -- சில நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை ஒரு மகாபுருடா பிறக்கிறார்" எனறு உலகெங்கிலும் பொதுவான நம்பிகசை இருந்து வருகிறது. இத்தகைய ஆத்மீகத் தலைவர், அமைதியையும ஒழுங்கு முறையையும கொண்டுவருகிறார்; இன்னலுறும மனிதகுலதது்க்கு வழிகாட்டி ஆறுதலளிககிறார்; இத்தகைய ஒரு காப்பாளராக இருந்தார் காந்தியார்.

அவர், தாம் தொட்டதையெல்லாம் அழகுபடுத்தினார். அவரைப் பொறுத்தவரையில், சமூக வாழ்க்கை என்பது ஒன்றிணைந்த ஒரு முழுமையாகும். அதன் ஒவ்வோர் அமசமும அவரது உயிர்த் துடிப்பின் வேகத்தைப் பெற்றது.

ஓர் எழுத்தாளர் கூறியதைப்போல், 'அவர் செயலாற்றிவந்த சமூக நலத்துறை ஒவ்வொன்றிலும் ஒருவித மனிதத்தன்மைதான் அவரது முயற்சியின் சாரமாக இருந்தது"—இதுதான் காந்தியவாதத்தின் சாரம்.

அவர், எல்லாவற்றையும் உட்கொள்ளும் முறையில் அணுகினார். மனித வாழ்க்கையை தனித்தனியாகவோ, துண்டு துண்டாகவோ அவர் ஒருபோதும் அணுகியதில்லை!

அவர் ஓர் இராசதந்திரி -- அரசியல்வாதி -- சமூகச் சீர்திருத்தவாதி -- பேச்சாளர் எழுத்தாளர் -- ஆசிரியர் -- மனிதாபிமானி -- உலகக் குடிமகன் -- சத்திய வேட்டையில் ஈடுபட்ட ஒருவர் -- அறிஞர் -- இவர்களெல்லாம் கலந்த ஒருவரவர்!

அவர் தமது எண்ணங்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளும் துணிச்சல் பெற்றிருந்ததால், தமது மனச்சாட்சியின் சொற்படி மட்டுமே நடந்தார். இவர் பல தடவை அச்சமின்றி -- தயக்கமின்றி உலகம் முழுவதையும் எதிர்த்து நின்றார்! உண்மையின் வீரக்காவலர் அவர்!

நம் நாட்டுக்கு அவருடைய தலைமை ஊக்கம் அளித்தது. சுமார் 25 ஆண்டுகள் அகிம்சை போராட்டம் நடத்தி, அரசியல் சுதந்தரம் பெற்றார்! தாமே செயலாக்காத -- தம்மால் செயலாக்க முடியாத சித்தாந்தங்களையும், நெறிகளையும் அவர் ஒருபோதும் நாட்டின்முன் வைத்ததில்லை என்பதால்தான், அவர் இந்த அளவுக்கு வெற்றிபெற முடிந்தது!

மனித குலத்தின்முன் இருந்த பெரும் பிரச்சினைகளை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் திறமை அவருக்கு இருந்தது! அவற்றைச் சமாளிப்பதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடிக்கும் விவேகம் அவருக்கு இருந்தது! சாதாரண அறிவை அசாதாரண அளவில் அவர் பெற்றிருந்தார்!

நீண்டகால உண்மை நிலையிலும். அடிப்படை நெறிகளிலும் எவை சிறந்தவை என்று அவர் கருதினாரோ, அவற்றை அரசியல் துறையில் நிறைவேற்றுவதற்கு வீரத்துடன் பாடுபட்டார்! 'சத்தியாக்கிரகம' எனும் செடியை அவர் தென்னாப்பிரிக்காவில் நட்டு வைத்தார்; அங்கு அவருடைய அலுவல்களுக்கு இந்த உண்மைகளும் நெறிகளும் அடிப்படையாக அமைந்தன! இந்தியாவுக்கு வருங்காலத்தில் தலைமை தாங்கிச செல்லவும், தமது நாட்டை அரசியல் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கவும் இது அவருக்குப் பயிற்சியளித்தது!

இந்தத் துறையில் மிக முக்கியமானவற்றை அவர் நமக்குக் கற்பித்தார்; அச்சத்தையும் பகைமையையும் விட்டுவிட்டு, சமத்துவத்தையும் சகோதர உணர்வையும் பெற்றுக்கொள்வதற்காக அவர், தம்மைப் பின்பற்றியவர்களுக்குப் பயிற்சியளித்தார்; சமூகத்தில் கொடுமைக்குள்ளான பகுதியினருக்கு வாழ்வில் ஏற்றம் கொடுத்தார்; அரிசனங்களின் வாழ்வை உயர்த்தினார்; இன்று அவர்கள் சட்டரீதியிலும், உண்மையிலும் இந்தியாவில் மற்ற வகுப்பினருடன் சம தகுதியையும், சம இடத்தையும் பெற்றிருக்கிறார்கள்.

முறையான வாழ்க்கைச் சித்தாந்தம் எதையும் அவா வகுக்கவில்லை; அவரது வாழ்க்கை, 'சத்திய சோதனை'களின் தொகுப்பாக இருந்தது. அவரே ஒரு தடவை கூறியதைப்போல் அவரது வாழ்க்கை அவரது செய்தியாக இருந்தது. உணமை, அகிமசை, சனநாயகம் ஆகிய அடிப்படை நெறிகளில் அவருடைய முழுத் தத்துவமும் வேரூன்றியிருந்தது. இந்த அடிப்படை நெறிகளை, அனைவரது நன்மைக்கு

(3-ம் பக்கம் பார்க்க)

காந்தி விட்டுச்சென்ற மரபுகள்

தலைமையமைச்சர்
இந்திரா காந்தி

மனித குலம், அழிவு ஆயுதங்கள் பலவற்றைப் பயங்கரமான அளவுக்குக் குவித்து வைத்திருக்கிறது. 'நம்பிக்கை கொள்வதற்கான உரிமை நமக்கு இருக்கிறதா' என்றுகூட நான் சில சமயம் எண்ணுவதுண்டு. அங்குமிங்கும் இப்போதும் போர் மூளுகிறது; ஆனால் உலகின் எல்லாப் பகுதிகளிலும் சிந்தனையில் பகைமையும், செயலில் வன்முறையும், கண்மூடித்தனமான கிளர்ச்சிப் போக்கும் வளர்ந்துவருவதுதான் மேலும் கவலையைத் தருகிறது -- பீதியைத் தருகிறது!

"இருள் சூழ்ந்திருந்தபோதிலும், ஒளி தொடர்ந்து இருக்கிறது" என்று காந்தி கூறினர்; நமக்கு நம்பிக்கை வேண்டும். ஆயுத பலத்தை ஆயுதங்கள் இல்லாமல் எப்படி எதிர்ப்பது என்பதை காந்தியார் மெய்ப்பித்துக் காட்டினர். இது ஒரு தடவை நடக்குமானல், மறுமுறையும் நடக்க முடியாதா என்ன?

வாழ்க்கை என்பது போராட்டம்; 'உயர்ந்த நிலையில் செல்ல வேண்டும்' என்று நோக்கம் கொண்டால் -- மேலும் அதிகமாகச் சாதனை செய்ய வேண்டுமென்று விரும்பினல் -- மேலும் அதிக அளவில் பணிபுரிய வேண்டும் -- தியாகம் செய்ய வேண்டும்.

நிலையான உண்மைகளை எல்லா சமயங்களைச் சேர்ந்தவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பழமைச் சிறப்புடைய சிந்தனைக்கு மறுபடியும் புத்துயிரூட்டி, மக்கள் வாழ்வின் ஒரு பகுதியாக அதைஅமைக்கும் வல்லமை வாய்ந்த 'தவப் புதல்வர்'களைப் பெற்றெடுக்கும் பேறு இந்தியாவுக்குக் கிடைத்திருக்கிறது. நமது காலத்தில் காந்தியும் நேருவும் -- பொது நலனில் தாங்களும் ஒன்று சேர்ந்து -- மிகச் சிரமமான காலத்தில் நமக்கு வழிகாட்டினர்கள். இவர்களில், ஒருவரை ஒருவர் முழுமை பெறச் செய்தார்கள். இலட்சக்கணக்கான மக்களின் நலனுக்கு உரியதா என்று ஒவ்வொரு முடிவையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென இவர்கள் அறிவுறுத்தினர்கள். எந்த ஒரு வாதத்தையும்விட, இந்தத் தத்துவம் நம்மைத் தவற்றிலிருந்து மீட்கும்!

கேள்வி எதுவும் கேட்காமல் -- தமது சொற்படி நடந்துகொள்ள வேண்டுமென்று காந்தியார் ஒருபோதும் கூறியதில்லை. முழுச் சோதனை இல்லாமல் தமது நோக்கங்களையும், அவற்றுக்கான வழிமுறைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர் விரும்பியதில்லை. விவாதத்தை அவர் ஊக்குவித்தார்.

எந்த ஒரு நேர்மையான கருத்தையும் அவர் அற்பமாக எண்ணியதில்லை. கருத்து வேறுபாடு கொண்டவர்களுடன் பேசுவதற்கு அவர் எப்போதும் தயாராக இருந்தார்.

அவர், தமக்கு முழுமையான அறிவு இருப்பதாய் உரிமை கொண்டாடவில்லை; ஆதலால் அந்தத் துறையில்கூட அவர் ஒரு சாதாரண 'தீர்க்கதரிசியிலிருந்து மாறுபட்டிருந்தார்.

அவர், நன்றிக் கடனை புகழுரையாக ஏற்றுக்கொண்டதில்லை -- தண்டனைக்கு அஞ்சியதும் இல்லை! தமது பணியின் பளுவினல் ஒருபோதும் அழுத்தப்பட்டிருக்கவில்லை! அவர், சிரித்துப் பேசும் ஒரு அறிஞர்!

காந்திஜியின் பிறந்த நாள் நூற்றுண்டு விழா ஆண்டு, ஜாலியன் வாலாபாக் துயர நிகழ்ச்சியின் 50-வது ஆண்டாக அமைகிறது! இந்த 50 ஆண்டுகளைத் திரும்பிப் பார்க்கும்போது, அவரது தனித்தன்மையின் முழு சக்தியை உணர முடிகிறது; அவரது அறிவுரையின் ஆற்றலை உணருகிறோம்; இருப்பினும், முழுமையாய் மதிப்பிடுவது நமக்கு அப்பாற்பட்ட செயல்!

நாம் அவருக்கு மிக அருகாமையில் இருக்கிறோம் என்றாலும்' ஒருவித மாறுதல் நிலைமையில்தான் இருந்துகொண்டிருக்கிறோம்.

இந்தியாவுக்கும் மனிதகுலத்துக்குமாக அவர் ஆற்றியுள்ள பணியை முழுமையாய் மதிப்பிடுவது பல ஆண்டுகளுக்கு முடியாத காரியமாக இருக்கும்.

"எல்லாவற்றையும் ஆராய்ந்து -- எல்லாவற்றுக்கும் ஒரு சமரச வழியைக் கண்டுபிடித்து -- எந்த நிலைமைக்கும் ஒரு வழிமுறையை நிர்ணயிக்கும் அளவுக்கு உலகத் தத்துவம் ஒன்றை காந்தியார் வகுத்தார் என்று நாம் நம்ப வேண்டும்" என காந்தியவாதிகள் கூறுவார்கள்.

'அனைத்தும் அறிந்தவர்' என்று ஒருபோதும் கூறிக்கொள்ளாத ஒருவரைப் பற்றி—சத்தியத்துடனும், அறிவுடனும் தமது பரிசோதனைகளை ஒருபோதும் நிறுத்திக்கொள்ளாத ஒருவரைப்பற்றி இவ்வாறு கூறுவது நியாயமாகாது.

அவர் ஒன்றிணைந்த மனிதராக இருந்த போதிலும், தனிப்பட்ட முழுமைகளுடன விவகாரம் வைத்துக்கொண்டதில்லை, அவரைவிடப் பெரிய இலட்சியவாதிகள் இருந்திருக்கலாம்; ஆனல், நடைமுறைச் சாத்தியமான கொள்கைகளைப் பொறுத்த வரையில், அவரைவிடச் சிறந்த மனிதர் இருந்திருக்க முடியாது.

அடிப்படை உண்மைகளை அவர் எடுத்துச் சொன்னர்; ஆனல், அவர் வகுத்த ஒவ்வொரு நடவடிக்கைத் திட்டத்திலும், 'நான் ஒரு அடி எடுத்து வைத்தால் போதும்' என்ற அடிப்படையிலேயே முன்னேறினர்.

கடந்த 20 ஆண்டுகளில் நாம் பின்பற்றிவரும் திட்டமிட்ட தொழில் வளப் பெருக்கக் கொள்கை, காந்தீயத் தத்துவத்தைக் கைவிடுவதற்கு ஒப்பானதாகும் என்று சிலர் குறை கூறுகிறார்கள்.

இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்து, 'குடிசைத் தொழில்கள்தான் வேண்டும்' என்று கூறுவோர்கூட, விமானங்கள், மோட்டார் கார்கள், டெலிபோன்கள் போன்ற பெரிய தொழில்களின் செய்பொருள்களைப் பயன்படுத்தாமல் இருப்பதில்லை.

காந்தியார், இரயில்வே அமைப்பை வெறுக்கவில்லை; அவர், கடிகாரங்களைத் தவருமல் பயன்படுத்தி வந்தார். இரயில் வண்டிகளையும், கடிகாரங்களையும் பயன்படுத்திக்கொண்டு, 'அவற்றை நாமே தயாரிக்கக் கூடாது' என்று சொல்வதில் அர்த்தமிருக்க முடியுமா?

ஆதலால், 'குடிசைத் தொழில்கள் வேண்டும்' என்ற காந்தியாரின் கருத்தை அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப புரிந்துகொள்ள வேண்டும்.

அவர், ஏழ்மையை அகற்றுவது பற்றிப் பெரிதும் கவலைப்பட்டார்; எதுவும் வீணுவதை எதிர்த்தார்; 'ஏராளமான வேலையற்ற கிராமவாசிகளின் மறைந்திருக்கும் ஆற்றலை முழுமையாய்ப் பயன்படுத்தி, நாட்டுக்கு பொருள்களையும் அவர்களுக்கு செல்வத்தையும் வழங்க முடியும்' என்று கருதினர்; தொழில் வள நடவடிக்கைகளின் முதல கட்டத்தில் இருந்த மோசமான விளைவுகளை எதிர்த்தார்; மனிதனின் இறுதியான வாழ்க்கை நிலைமை பற்றிக் கவலை கொண்ட அவர், 'நமது சொந்தக் கண்டுபிடிப்புகளின் கைதிகளாக நாம் ஆகிவிடக்கூடாது' என்று அவர் நம்மை எச்சரித்தார்.

இயந்திரங்களைப் பற்றி அவர் நிறைய எழுதியிருக்கிறார்; அவர் எழுதியதை அப்படியே விளக்கிக் கூறும் சிலர், 'ஒரு குறிப்பிட்ட விதத்தில்தான நாம அதைப் புரிந்துகொள்ள வேண்டும்' என்று கருதுகிறார்கள்; ஆனல் காந்தியின் கருத்துக்கள் அதைவிட விரிவானவை—நடைமுறைச் சாத்தியமானவை என்பதுதான் உண்மை.

கடந்த காலத்தின் சிறப்பில்—நிகழ்காலத்தில் — வருங்காலத்திற்காகவே அவர் வாழ்ந்தார்; ஆதலால்தான், அவரது உயர்ந்த சிந்தனைகள் காலத்தைத் கடந்தவையாக இருக்கின்றன!

உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அவர் எவ்வளவோ சொன்னர்; எவ்வளவோ எழுதினர்; தனி நபர்களின் உள் உணர்வுக்கு வழிகாட்டுவதற்காகச் சில கருத்துக்களை வெளியிட்டார்; ஆனல், பல அம்சங்களிலிருந்து உருவாக்கப்பட்ட தகவல்களை வைத்துக் கொண்டு அவர், அறிவை வளர்க்கவில்லை! தமது 'வாழ்க்கை' எனும் பரிசோதனைச் சாலையில் தமது எண்ணங்களைக் கருவிகளாகப் பயன்படுத்தியவர் அவர்!

காந்தியார், இந்தியாவின் சாதாரண மக்களுடன் தம்மை முழுமையாக ஒன்றுபடுத்திக் கொண்டவர். இதற்காகத் தாம் அணியும் உடைகளைக்கூட மாற்றிக் கொண்டவர்; இருப்பினும், உலகின் மற்ற பகுதிகளிலிருந்து வந்த மிகச் சிறந்த சிந்தனைகளை அவர் வரவேற்றார்.

அவர் விட்டுச் சென்ற மற்றொரு மரபு சமயச் சார்பின்மையாகும்; இதற்காக அவர் உயிரையே கொடுத்தார்!

சமயச் சார்பின்மை என்றால், சமயப் பற்று இன்மை என்றோ, சமயத்தின்பால் அலட்சியமாக இருப்பது என்றோ அர்த்தமில்லை; எல்லா சமயங்களுக்கும் சம மதிப்பு கொடுப்பது என்பது பொருள். அது வெறும் சகிப்புத் தன்மை அல்ல; செயலான மதிப்பு ஆகும். சமயச் சார்பின்மைக்கு இடைவிடாத சுய பரிசோதனையும், குன்றாத உழைப்பும் தேவைப்படுகின்றன.

"மாற்றாரது சமயத்தை மதிக்கவில்லை என்றால், ஒருவரும் தமது சொந்த சமயத்தை மதிக்க முடியாது" என்று அசோகர் ஒரு பேருண்மையை பொறித்துச் சென்றார். இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு ஆட்சியாளர்கள், இதற்கு ஏற்றபடி நடந்த சமயங்களிலெல்லாம் இந்தியா சிறந்த நாடாக இருந்திருக்கிறது -- உயர்ந்த நிலைக்குச் சென்றிருக்கிறது.

நமது காலத்தில் காந்தியும் நேருவும், நமக்காக இதை ஒரு வாழும் உண்மையாக அமைத்தார்கள்! இது இல்லாவிடில், நம் நாட்டுக்கு வருங்காலமே இல்லை!

காந்தியார் நமக்குத் தந்த மற்றொரு சிறந்த அறிவுரையைப் பற்றி -- அகிம்சையைப் பற்றிப் பேசத் தயங்குகிறேன். வன்முறை நியாயமாக இருப்பதற்கான காரணங்களைக் கண்டதனல் நான் இப்படித் தயங்கவில்லை!

—புதுடில்லி காந்தி அமைதி நிறுவனம் வெளியிட்டுள்ள 'மகாத்மா காந்தி—100 ஆண்டுகள்' என்னும் புத்தகத்திலிருந்து.

அறநெறி உணர்வு!

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

முறைக்கும் சித்தாந்தத்துக்கும் இடையேயான இசைந்த ஒற்றுமையாக ஆக்கி அதற்கு உதாரணமாக வாழ்வதற்கு வேண்டிய மனப்பூர்வமான நேர்மை எத்தனை பேரிடம் இருக்கிறது?

இந்த இசைவான ஒற்றுமையை முழுமை பெறச் செய்யும் பொருட்டு காந்தியார் பாடுபட்டார். அவரது வாழ்க்கையின் பல அம்சங்களை—அவரது உடை, அவரது உணவு, அவரது அன்றாட வாழ்க்கை முறை ஆகியவற்றை நாம் பார்க்கலாம்.

மேலும் அவரது அடிப்படையான அம்சங்களையும் பார்ப்போம். எல்லாவற்றையும்விட, முக்கியமாகச் சக ஊழியர்களிடம் அவர் நடந்துகொண்ட விதத்தைப் பார்ப்போம்; சாதாரணமாக இதைத்தான் நாம் பார்க்கத் தவறிவிடுகிறோம்; ஏனென்றால், மிக அதிக அளவிலான ஈடுபாடு இதற்குத் தேவை.

மனப்பூர்வமான நேர்மை உடையவர்கள், சொற்களால் திருப்தியடைந்துவிடுவதில்லை; அவர்கள், காரியங்களைச் செய்ய விரும்புகிறார்கள். 'செயலாள' அலுவல் என்று காந்திஜி கூறினரே—அத்தகைய அளவில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். இதன் ஒரு அம்சம் அந்த அலுவலேதான். மற்றொன்று, அந்த அலுவலைச் செய்பவர். சாதனையின் தரம் இவரைப் பொறுத்துத்தான் அமைந்திருக்கும்.

காந்தியார் குறிப்பிட்ட 'செயலாள' அலுவல், வரலாற்று அம்சமாக மாறிவிடலாம். அவர் மனிதர்களை உருவாக்கிய அலுவலுக்கு என்றுமே தற்கால முக்கியத்துவம் இருந்துவரும். அதைத்தான் இன்று மிக அதிகமாக நினைவில் கொள்ளவேண்டும். 'சுதந்தர மக்கள்' என்ற முறையில், அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய அரசை வைத்துக்கொண்டிருக்கும் நமக்கு, அதிகாரத்தை நம்மால், மனப்பூர்வ -- நேர்மையின் பெருமையில் -- செயலான அலுவலுக்காக அர்ப்பணித்துக் கொள்வதில் தலைமுறை தலைமுறையாய் பணியை ஏற்று நடத்தும் மனிதர்களை உருவாக்குவதில் நம்பிக்கை கொண்ட ஒரு தலைமை வேண்டும்.

—புதுடில்லி காந்தி அமைதி நிறுவனம் வெளியிட்டுள்ள 'மகாத்மா காந்தி—100 ஆண்டுகள்' என்னும் புத்தகத்திலிருந்து.

வழிகாட்டும் ஒளிவிளக்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக மனித முயற்சிகளின் எல்லாத் துறைகளிலும் இலாபத்துடன் நிறைவேற்றலாம்.

காந்தியார், அரசியல் நடவடிக்கைகளில் மட்டும் கைதேர்ந்தவராக இருக்கவில்லை; அவர் ஒரு சிந்தனையாளராக இருந்தார். எளிமையாக நல்ல பொருளோடு எழுதும் திறமை படைத்த பார்வையாளராக இருந்தார். அவரது நூல்களிலும், கடிதங்களிலும் அவர் தமது சிந்தனைகள் -- செயல்கள் -- கனவுகள் ஆகியவற்றைத் தங்குதடையின்றி நயத்தோடு எழுதிச் சென்றிருக்கிறார்; அவரது உரைகளிலும் இதையே காண்கிறோம்.

அவர் ஒரு மனிதாபிமானியாக இருந்தார்; கருத்துக்களை மட்டும் அவர் நேசிக்கவில்லை -- மனித குலத்தை நேசித்தார்.

அவர் இந்த அடிப்படை நெறிகளைச் சிந்தித்த போதே, தமது எண்ணங்களையும், அவற்றின் பயனையும பரிசோதனை செய்வதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடித்தார். இந்த அலுவலில் காந்தியார் அவரையும், அவரது சக ஊழியர்களையும் ஒரு முடிவற்ற 'மனிதப் பரிசோதனைச்சாலை'யாகக் குறைத்துக்கொண்டார்.

அவர் இந்த நாட்டுக்குக் கொண்டுவர விரும்பிய புதிய கல்வி முறைக்கு, சுயபலச் சார்புதான் அடிப்படையாக இருந்தது; 'கலைகளில் மட்டுமின்றி, நெற்றி வியர்வை சிந்தி, வாழ்க்கைக்கு வேண்டியதைச் சம்பாதித்துக்கொள்ளும் அளவுக்கு ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு கைவினைத் தொழிலில் பயற்சி பெற்றிருக்க வேண்டும்' என்று அவர் கருதினர்.

காந்தியின் சித்தாந்தத்தில், 'உழைப்புக்கு உணவு' என்பது முக்கிய அம்சமாக இருந்தது.

சமூக, பொருளாதார விடுதலை—அறநெறி வளர்ச்சி—ஆத்மீகப் புதுவாழ்வு ஆகியவைதான் அவருடைய வாழ்க்கையில் முக்கிய சாரமாக இருந்தன.

—புதுடில்லி காந்தி அமைதி நிறுவனம் வெளியிட்டுள்ள 'மகாத்மா காந்தி—100 ஆண்டுகள்' என்னும் புத்தகத்திலிருந்து.

இலட்சக்கணக்கான ஏழைக் குடும்பங்களை வாழவைக்கும் நற்பணியில் பங்கேற்பீர்!

அமைச்சர் முத்துசாமி வேண்டுகோள்

சென்னை, அக். 1—

"செந்தமிழ் நாட்டோரே! நீவிர் வாங்கி அணியும் கதர், ஆண்டு தோறும் ரூ. 321.61 இலட்சம் ஊதியமாகத் தந்து 2.68 இலட்சம் குடும்பங்களைக் காப்பாற்றுகிறது; எனவே, நீங்கள் கதர் வாங்கும்போதும், மற்றவர்களை வாங்கச் செய்யும்போதும் பல ஏழைக் குடும்பங்களை வாழவைக்கும் மகத்தான பணியில் பங்குகொண்டு அண்ணல் காந்தியாரின் விருப்பத்தையும், அவர் வழி நிற்கும் அறிஞர் அண்ணாவின் விருப்பத்தையும் நிறைவேற்றுகிறீர்கள்"

இவ்வாறு காந்தியடிகள் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, உள்ளாட்சித் துறை அமைச்சரும், கதர் -- கிராமக் கைத்தொழில் ஆயத் தலைவருமான திரு. மா. முத்துசாமி அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டிருக்கிறார்; அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"நாட்டுக்காக வாழ்ந்து நம் இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும் உலக உத்தமர் காந்தியார் பிறந்த நாள் அக்டோபர் இரண்டு.

அன்று தொடங்கி அம்மாத இறுதிவரை தமிழகமெங்கும், 'கதர் விற்பனை இயக்கம்' தங்களின் நல்லாதரவோடு நடைபெற இருக்கிறது.

சென்ற ஆண்டு நான் விடுத்த வேண்டுகோளினை ஏற்று 1966-ம் ஆண்டைவிட ரூ. 10 இலட்சத்திற்கும் அதிகமாக விற்பனை செய்து ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தி என்னைப் பெருமைப்படுத்திய அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

இவ்வாண்டு கண்ணைக் கவரும் வண்ணக் கதர்த் துணிகளை நமது ஏழை நெசவுத் தொழிலாளர்கள் அரும் பாடுபட்டு உருவாக்கி வைத்திருக்கின்றார்கள்!

எனவே, சென்ற ஆண்டின் விற்பனையை மிஞ்சும் விதமாக -- கட்சி வேறுபாடு கருதாது -- கதர்த் துணிகளை வாங்கி, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான குடும்பங்களை வாழவைக்கும் நற்பணியில் பங்கேற்க உடன் பணியாற்றும் ஊழியர்களையும், ஊராட்சி -- நகராட்சி மன்றத்தினரையும், சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்களையும், ஊருக்குழைக்கும் சீரணித் தோழர்களையும், உடன் பிறப்புக்களான ஆசிரியப் பெருமக்களையும், ஆன்றோர் -- சான்றோர் -- அருமைத் தாய்மார்கள் அனைவரையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்."

"நாம் அனைவரும் தத்தம் கடமையைச் செய்தால், உரிமையைத் தேடிச் செல்ல வேண்டியிருக்காது."

—மகாத்மா காந்தி

கைதிகளின் தண்டனைக் காலம் குறைக்கப்படும்

சென்னை, அக். 1—

காந்தியாரின் நூற்றாண்டு விழாவையொட்டிச் சிறைக் கைதிகளின் தண்டனைக் காலம் குறைக்கப்படும்.

தமிழகத்தில் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு இரண்டாவது முறையாக சிறைக் கைதிகளின் தண்டனை குறைக்கப்படுகிறது.

இவ்வாண்டு சனவரித் திங்களில் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டையொட்டி சிறைக் கைதிகளின் தண்டனையைக் குறைக்கத் தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது; இப்போது இரண்டாவது முறையாகக் கைதிகளுக்குச் சலுகையளித்து தண்டனைக் காலத்தைக் கழக அரசு குறைத்திருக்கிறது.

தண்டனைக் குறைப்பைப்பற்றி அமைச்சர் செ. மாதவன் தமது உத்தரவில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"ஆயுள் தண்டனைபெற்ற கைதிகளுக்கு ஓராண்டும்; மதுவிலக்குத் தொடர்பான குற்றங்களுக்காகத் தண்டனைபெற்றவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலத்தில் கால் பகுதியும்; மூன்றாண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகள்வரை சிறைத் தண்டனை பெற்றவர்களுக்கு மூன்று மாதமும்; ஐந்தாண்டுமுதல் பத்தாண்டுவரை தண்டனைபெற்றவர்களுக்கு ஆறு மாதமும்; மேலும் சில குற்றங்களைப் பொறுத்தவரையில் குற்றத்தின் தன்மை -- கடுமை -- ஏற்கனவே அனுபவித்த தண்டனைக் காலம் குற்றவாளிகளின் நடத்தை போன்றவற்றைக் கவனத்தில் கொண்டு தண்டனைக் குறைப்பு செய்யப்படுகிறது."

பம்பாய் தி. மு. க. தோழர்கட்கு:

★

"நாடாளுமன்ற தி மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளும் வழியில் 4—10—68 மாலை 4-20 மணிக்கு விமானம் மூலம் பம்பாய் வந்து சேருகிறார்கள்.

"விமான நிலையத்தில் அவருக்கு அளிக்கப்படும் வரவேற்பில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

"அன்று மாலை 6-30 மணிக்கு தி. மு. க. சார்பில் வழியனுப்பு விழா நடத்தும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன"

என்று பம்பாய் தி.மு.க. தலைமைக் குழுச் செயலாளர் தொ. து. அன்புச்செழியன் அறிவிக்கிறார்.

சென்னையில் காந்தி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்

2 10 68:

இராஜாஜி மண்டபத்தில்

காலை 8-மணி: சர்வ சமய வழிபாடு.

மாலை 3-30 மணி: பொதுக்கூட்டம்; தலைவர்: அமைச்சர் மா. முத்துசாமி; பேசுவோர்: ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ, பி. என். பரமசிவம்.

சிறுவர்கள் அரங்கில்

மாலை 5-மணி: காந்தியின் வாழ்க்கை வரலாற்றுப் படக் காட்சி (33 ரீல்கள்); டாக்டர் இராதாகிருஷ்ணன் தொகுத்த காந்தி நினைவு மலர் வெளியீட்டு விழா; தலைவர்: எம். பக்தவத்சலம்; வெளியிடுபவர்: கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன்.

காந்தி சிலை அருகில்

அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டம்; தலைவர்: இரா. நெடுஞ்செழியன்; பேசுவோர்: பக்ருதீன் அகமது (மத்திய அமைச்சர்), சி. சுப்பிரமணியம், ம.பொ. சிவஞானம் எம் எல்.ஏ, எம் கல்யாணசுந்தரம், எச்.வி ஹண்டே, கே. ஆர். நல்லசிவம், கே. ஆறுமுகசாமி, லெஸ்லி நியூபிகின் (சென்னை பிஷப்), மு. வரதராசனார், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், கி. வீரமணி, டி. கே. சண்முகம், திருமதி சம்பாவதி வெங்கடாசலம், டாக்டர் விஜயலட்சுமி.

கதராடைகளுக்குத் தனித் தள்ளுபடி

சென்னை, அக். 1—

காந்தியடிகள் பிறந்தநாள் விழாவையும், தீபாவளியையும் முன்னிட்டு, கதர்ப் பருத்தி, பட்டுத் துணிகள் சில்லறை விற்பனையில் 10 சதவிகிதம் தள்ளுபடித் தொகை வழங்கத் தமிழகக் கதர் -- கிராமத் தொழிற் கழகம் முடிவு செய்துள்ளது.

அக்டோபர் 2-ப் நாள் முதல் 21-ம் நாள்வரை இருபது நாட்களுக்கு வழங்கப்படும் இந்தத் தள்ளுபடி, 'ரெடிமேட்' ரகங்களுக்கும் கிடைக்கும்.

REGD. NO. ROJA
ரோஜா பாக்கு & புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

அண்ணாவின் உடல்நிலை

நியூயார்க், அக். 1

அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு மெமோரியல் மருத்துவமனையில் இருந்துவந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், மருத்துவமனையிலிருந்து வெளிவந்துவிட்டார்கள்.

ஐ. நா. பேரவை இந்தியப் பிரதிநிதி திரு. ஜி பார்த்தசாரதி அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, அவரது இல்லத்திலேயே தங்கி ஓய்வு எடுத்துக்கொள்ள அண்ணா அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

மூன்று வார ஓய்வுக்குப்பின் சென்னை திரும்பத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சென்னை வந்ததும், உடல்நிலை தேறுவதற்கும், களைப்பு உண்டாகாமல் இருக்கவும் சில வசதிகளைச் செய்யும்படி டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

உடற்பயிற்சிக்காக நடந்து உலாவத் தோட்டமும், காற்றோட்டமும் உள்ள வீட்டில் வசிக்கவேண்டும் என்றும், குளிரூட்டும் சாதனம் (ஏர்-கண்டிஷன்) பொருத்தப்பட்ட அறையிலேயே இருக்கவேண்டும் என்றும், பயன்படுத்தும் காரிலும் குளிரூட்டும் வசதி அமைக்கவேண்டும் என்றும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

மொரார்ஜி சந்திப்பு

இந்தியத் துணைத் தலைமையமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள், அண்ணா அவர்களை மெமோரியல் மருத்துவமனையில் சந்தித்து உடல்நலம் பற்றி விசாரித்தார். பதினைந்து நிமிட நேரம் அண்ணாவுடன் பேசிக் கொண்டிருந்தார்.

"எவ்வளவு நாளானாலும், உடல்நிலை நன்கு தேறிய பிறகே இந்தியாவுக்குத் திரும்புங்கள் என்று அவர் அண்ணாவிடம் கேட்டுக் கொண்டார்.

இரா. செழியன் மடல்

சென்னை, செப். 30—

நியூயார்க்கிலிருருந்து திரு. இரா செழியன் அவர்கள், 'நம் நாடு' இதழுக்கு (25—9—68-ல்) எழுதிய கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:—

"அண்ணா அவர்கள் நலமாக இருக்கிறார்கள். இப்பொழுது உதவியில்லாமல் நடமாட முடிகிறது. காலையிலும் மாலையிலும் இருமுறை நூறு அடி தூரம் நடக்கிறார்கள்.

வாய்வழியாக உணவு கொடுக்கத் தலைப்பட்டுள்ளார்கள். டீ, தண்ணீர் முதலியன தரப்படுகின்றன.

இன்னும் ஒரு வாரத்துக்கு மருத்துவமனையில் தங்கி இருக்க வேண்டும். பிறகு இரண்டு வாரத்துக்கு அருகாமையில் உள்ள அமைதியான இடத்தில் தங்கியிருப்பார்கள். உடல்நலம் சீரடைந்து வருகிறது.

'நம் நாடு' அண்ணா 60-வது பிறந்த நாள் விழா மலர் கிடைக்கப் பெற்றோம். கிடைத்த குறுகியகால அளவில்--அதிலும் வேதனை கப்பிய சூழ்நிலையில் இந்த அளவுக்கு மலர் கொண்டுவந்தது பெரிதே! மலர் முகப்பு நல்ல முறையில் எடுப்பாக இருக்கிறது; கட்டுரைகளும் நன்முறையில் உள்ளன.

அறிவிப்பு

2—10—68 புதன்கிழமை காந்தி பிறந்த நாளை முன்னிட்டு விடுமுறையாகையால், அன்று 'நம் நாடு' இதழ் வெளிவராது; 3—10—68 அன்று சென்னையிலும், மறு நாள் வெளியூர்களிலும் வழக்கம் போல் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

தர்மபுரி மாவட்ட தி. மு. க. தேர்தல் முடிவுகள்

அவைத் தலைவர்:
எம். சுப்பிரமணியம்

செயலாளர்: எச். எல். முருகேசன்

துணைச் செயலாளர்:
எம். ஆர். நெடுமாறன்

பொருளாளர்: து. பெரியசாமி

பொதுக்குழு உறுப்பினர்கள்:
பி. திம்மராயன்
ஆர். சின்னசாமி
டி பொன்னுசாமி
கே. இராதாகிருட்டினன்

அழிவுக்கு வழிகோலும்!

"நாம், ஒழுங்கு — கட்டுப்பாட்டைப் பாதுகாக்கும் திறமை இல்லாத மக்கள் என்று மற்றவர்கள் சொல்லும்படி நடந்து கொள்ளக்கூடாது; ஒழுங்குக் கட்டுப்பாடின்மை அழிவுக்கு வழிகோலும்!"

—மகாத்மா காந்தி

நடக்க இருப்பவை

4--10--68

காரைக்குடி

எழுச்சி மன்றச் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 7-மணிக்கு காந்தி திடலில்; தலைவர்: சித. சிதம்பரம்; பேசுவோர்: பெரியார் ஈ. வெ. ரா., வி. மலைக்கண்ணன் எம்.எல்.ஏ., டி. கே. சிறைமீட்டான் எம். எல். ஏ., அலங்காரம் எம்.எல்.ஏ., வி. பி. முத்துராமன்.

கலைக் குழுக்கள் முகவரி

'தென்னவனின் ஆட்சி' என்ற கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்க:—

கோ. மா. இளஞ்சோழன்,
நகர தி. மு. கழகம்,
14/47 தெப்பக்குளம் வீதி,
கோவை-1.

மதுரை நாவலர் கலைக் குழுவினர் கருப்பையா — பாலன் நிகழ்த்தும் 'கழகத்தின் சாதனை காங்கிரசுக்கு வேதனை' எனும், கழகக் கலை நிகழ்ச்சி நடத்த கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்க:—

நாவலர் கலைக் குழு,
16, இசுமாயில்புரம்
12-வது தெரு,
முனிச்சாலை ரோடு, மதுரை-9.

சென்னை மாநகராட்சித் தேர்தலையொட்டி திருவாரூர் முருகு பாண்டியனின் கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்க:—

எம். ஆர். சந்திரன்,
2, பெருமாள்கோயில்தோட்டம்,
2-வது சந்து, சென்னை-1.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
தென் வட்டாரம்

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

எண் 480/B3/68.69 நாள் 24—9—68

பின்வரும் வேலைக்காக உறையின்மீது வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிடப்பட்டு, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 21—10—68 பிற்பகல் 3-மணிவரை வரவேற்கப்படுகின்றன.

தென் சென்னை புறநகர்த் திட்டத்தில் BP/SHB எண் 2/68-இன்படி இரண்டு அறைகள், இரண்டு அடுக்குகள் கொண்ட வாடகைக் குடியிருப்புகள் (Flats) அடங்கிய 10 கட்டிடங்கள் (பிளாக்குகள்) கட்டுதல்.

வேலையின் தோராய மதிப்பீடு	ரூ. 3,37,640
பொறுப்புத் தொகை	ரூ. 5,100

ஒப்பந்த விதிகள் மற்ற விவரங்களை 7—10—68 முதல் எந்த அலுவல் நாளிலும் காலை 11 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் ரூ. 15.15 (விற்பனை வரி உட்பட) ரொக்கமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் பிற்பகல் 3.05 மணிக்குத் திறந்து பார்க்கப்படும்.

எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது அனைத்தையுமோ எந்தவிதக் காரணமும் காட்டாமலே ஏற்றுக்கொள்ளவோ, ரத்து செய்யவோ கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு அதிகாரம் உண்டு.

36, மவுண்ட் ரோடு,
சென்னை-35

தலைவர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-[illegible]) [illegible] வெளியிடப்பெற்றது.